**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.32/2023**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெகதீஷ் | மதம் | : இந்து |
| த/பெ | : ராமசந்திர நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 51 | கிராமம் | : ராஜபத்மாபுரம் |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**10.02.2026**
**வா.சா. 2 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 4ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 2ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

2. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். **(நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 1 ஆகவும் வரைபடம் நீ.ம.சா.ஆ 2 ஆகவும் நில அளவையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 3 ஆகவும் நில அளவையர் வரைபடங்கள் (2 எண்ணம்) நீ.ம.சா.ஆ 4 வரிசை ஆகவும் புகைப்படங்கள் (20 எண்ணம்) மற்றும் குறுந்தகடு நீ.ம.சா.ஆ 5 வரிசை ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)